**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.483/2021 |
| Deposition of witness for Prosecution | : | P.W-6 |
| Name | : | சிலுவை அந்தோணி, வயது 35 |
| Father Name/Husband Name | : | ரத்தினசாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of December 2024.

**(எதிரி ஆஜர்.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது சூரங்குடி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 13.01.2021 ஆம் தேதி நாலாட்டின்புதூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது 07.15 மணிக்கு கோவில்பட்டி அரசு தலைமை மைருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் படி மேற்படி மருத்துவமனையில் இருந்து உள்நோளாயளியாக சிகிச்சையில் இருந்த பார்த்திபன் மற்றும் 7 நபர்களின் இன்டிமேஷனைப் பெற்று பார்திபன் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்கமூலத்தை பெற்றேன்.
2. பின்னர் நிலையம் வந்து 09.00 மணிக்கு புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.11/2021 பிரிவுகள் 279, 337, 304-A IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமதன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். வழக்கு பற்றி விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் இன்டிமேஷன் வரப்பெற்று அதன் அடிப்படையில் அரசு மருத்துவமனைக்கு சென்று காயம்பட்ட நபரிடம் வாக்குமூலம் வாங்கியதாக நீங்கள் சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல.
2. முதல் தகவல் அறிக்கை 18.01.2021 ஆம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கை பின்யோசனை செய்து தயார் செய்யப்பட்டதுஎன்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.